பக்கங்கள் 18+ 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 29 சனிக்கிழமை 12.04.2025 | அதிர்வு 252

## இருவரின் சடலங்கள் ஹாலிஎலவில் மீட்பு!

பதுளை, ஹாலிஎல பகுதியில் அடையாளம் தெரியாத இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல நகரிலுள்ள 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சட்டமா அதிபரை நாளை காலை சந்திக்கிறது தேர்தல் ஆணையம்

### அதன் பின்னரே தேர்தல் குறித்து இறுதி முடிவு

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் சட்டச் சிக்கல்கள், குழப்பங்கள் ஏற்பட்டுள்ள பின்னணியில் இன்று காலை கூடிய தேர்தல் ஆணையம் அது பற்றி விரிவாக ஆராய்ந்தது. தேர்தல் ஆணையக் கூட்டத்தில் ஆணையாளர்களிடையே முரண்பாடான கருத்து நிலைப்பாடுகள் வெளிப்பட்டன எனத் தெரிகிறது.

இவ்விவகாரத்தை ஒட்டி நாளை காலையில் சட்டமா அதிபரை தேர்தல் ஆணையம் நேரடியாகச் சந்திக்கக் கூடிய ஏற்பாடு இருப்பதாக அறிய வந்தது.

சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரித்தமை தொடர்பான வழக்குகளில் உயர்நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் தீர்ப்புகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து என்ன செய்வது என்பது பற்றி தேர்தல் ஆணையம் தீர்மானிக்கும் எனத் தெரிகிறது.

சட்டச் சிக்கல்கள், வழக்குகள், நெருக்கடிகள் இல்லாத உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை குறிப்பிட்ட மே 6ஆம் திகதி நடத்திக் கொண்டு, சட்டச் சிக்கல் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைப் பிறிதொரு கட்டத்தில் நடத்துவது குறித்தும் இன்றைய கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.




# பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை நிறுவனமயப்படுத்தியது ஜே.வி.பிதான்!

### சாடுகின்றார் பசுமை இயக்கத்தின் ஐங்கரநேசன்

தென்னிலங்கை அரசியலும் பௌத்தமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தென்னிலங்கை அரசியலில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் கோலோச்சி வந்துள்ளது. ஆனால், அதனை நிறுவனமயப்படுத்தி பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியை உருவாக்கியது ஜே.வி.பி. மாத்திரமே. ஜே.வி.பியின் முன்னணி அமைப்புகளில் மகளிர் அணி, உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அணிகளுடன் மூன்றாவதாக பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியும் உருவாக்கப்பட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்திய 03



# சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் பஸ் விபத்தில் பலருக்குப் படுகாயம்!

### காக்காப்பள்ளிய பிரதேசத்தில் இன்று காலை சம்பவம்

(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் காக்காப்பள்ளிய பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அதிக வேகத்துடன் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரம் மற்றும் வீடொன்றின் மதில் மீது மோதியதில் இந்த



விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது பஸ்ஸில் பயணித்த பயணிகள் பலர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதியின் கனவக்குறைவே விபத்துக்கு காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர்களின் மீது பாலியல் துஷ்பிரயோகம்: நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிப்பு

கிளிநொச்சியில் 16 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் விளையாட்டுப் பயிற்றுநர் விரைவில் கைது செய்யப்படுவார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜிடம் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று சனிக்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ், கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்ட போது, இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் 16 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையொன்றின் சிற்றூழியராக பணியாற்றும் இந்த நபர் விளையாட்டு ஒன்றின் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார். இவரிடம் விளையாட்டுப் பயிற்சி பெற்றுவந்த சிறுவர்களில் 16 பேரை அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறுவர்கள் 10 – 13 வயதுக்குட்டவர்கள் என்றும் இவர்களைப் பயிற்றுவிப்பாளர் மலசலகூடத்துக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் சிலரது நடத்தைகளில் மாற்றமும், கல்வியில் திடீர் பின்னடைவும் அவதானிக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் இருவர் மூலமே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு சிறுவர்கள் உட்படுத்தப்பட்ட விடயம் வெளியே தெரியவந்துள்ளது.

இதனையடுத்துப் பாடசாலை நிர்வாகம் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டமையைத் தொடர்ந்து, பொலிஸாருக்கு இவ்விடயம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு பெற்றோர் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் வாக்குமூலத்தின் அடிப்படையில் தொடர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சந்தேக நபரை இதுவரை கைது செய்யாத பொலிஸார் பாதிக்கப்பட்ட சிறுவர்களை குற்றவாளிகள் போல் நடத்துகின்றனர் எனப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை பாடசாலைக்குச் சென்ற பொலிஸார் சிறுவர்களை மாலை 4 மணி வரை அறை ஒன்றில் அடைத்து வைத்தனர் எனவும் அவர்களை பொலிஸ் வாகனத்தில் பொலிஸ் நிலையம் வரை கொண்டுசெல்ல முற்பட்ட போது சிறுவர்கள் பயத்தில் அழுதனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாலை நான்கு மணி வரை மதிய உணவின்றி சிறுவர்களை பொலிஸார் பாடசாலையின் அறையில் அடைத்து வைத்தமயை அடுத்து, பெற்றோர்கள் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளனர்.

“பிள்ளைகள் குற்றவாளிகள் அல்லர், அவர்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், எனவே அவர்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு பொலிஸார் நடந்து கொள்ள வேண்டும்” என பொலிஸாருக்கு வலியுறுத்தியமையோடு விசாரணைகளுக்காக பிள்ளைகளைத் தாமே பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருவார்கள் எனவும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச்செல்ல அனுமதிக்க முடியாது எனவும் பெற்றோர்கள் தெரிவித்த பின்னர் பொலிஸார் அங்கிருந்து சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் பெற்றோர்களின் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, சிறுவர்களின் மன நிலை பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து பெற்றோர் இந்தப் பிரச்சினையிலிருந்து தாமாக விலகிக்கொள்ளும் வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன எனவும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானை 90 நாள்கள் தடுத்து வைப்பதற்கு அனுமதி




முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை (பிள்ளையானை) பயங்கிரவாத தடுப்புச் சடடத்தின் கீழ் 90 நாள்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள் எது எனச் செய்திகள் வெளியாகி யுள்ளன.

2006 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் காணாமல்போன சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மட்டக்களப்பு பிரதேசத்தில்வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, பிள்ளையான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 72 மணிநேரம் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுவிசாரணைக் குட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பிள்ளையானை மேலும் 90 நாள்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




# டிப்பர் ஏறியமையால் மூதாட்டி பரிதாபப் பலி

யாழ். திருநெல்வேலி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற டிப்பர் விபத்தில், மூதாட்டியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர், திடீரென நகர்ந்ததால், வீதியின் கரையாக நடந்துசென்ற மூதாட்டியை மோதியதுடன் அவர் மீது ஏறியுள்ளது. இதையடுத்து அந்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

33 வயதுடைய டிப்பர் சாரதி கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## பௌத்த - சிங்களப் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்தரிப்புக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தமிழின விரோதப்போக்கை சிங்கள மக்களிடையே இந்தப் பிக்குகள் அணியின் மூலமே ஜே.வி.பி. விதைத்தது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியப் பேரவையின் யாழ். மாநகரசபை வேட்பாளர்களின் அறிமுகக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

அமெரிக்கா இலங்கையில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு விதித்துள்ள அதியுயர் வரியை ஜனாதிபதி அநுரகுமர திஸநாயக்க கொரோனாவுக்கும், சுனாமிக்கும் நிகரானதாக ஒப்பிட்டுப் பேசியுள்ளார். இந்தப் பொருளாதார நெருக்கடியை நாம் தேசமாக ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கையைச் சுனாமி தாக்கியபோது நாடுதழுவிய ரீதியில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளவிருந்த ஒப்பந்தத்தை அடியோடு ஜே.வி.பி. நிராகரித்துப் பேரிணிகளைக்கூட நடாத்தியது. அப்போது சுனாமி நெருக்கடியை தேசமாக எதிர்கொள்ளவிடாது ஜே.வி.பியைத் தடுத்தது தமிழின விரோதப் போக்கேயன்றி வேறென்ன?

ஜே.வி.பி. தன்னை வெளிப்பார்வைக்கு ஓர் இடதுசாரி அமைப்பாகக் காட்டிக்கொண்டாலும் அது உண்மையான மார்க்சியக் கட்சியாக ஒருபோதும் இருந்ததில்லை. ஆரம்பத்தில் மார்க்சியத்தினதும் சிங்களத் தேசியவாதத்தினதும் கலவையாக இருந்த ஜே.வி.பிழ்பின்னர் முழுமையாக சிங்கள தேசியவாதக் கட்சியாகவே மாறியது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நோர்வேயின் மத்தியஸ்த்தத்தை எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரங்களை முன்னெடுத்தது. இராணுவத் தீர்வை வெளிப்படையாகவே முன்வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை போரைத் தொடங்குமாறு வலியுறுத்தியது. இந்த கடும் தேசியவாதப் போக்கே ஜே.வி.பியை ஒரு சிங்கள தேசியச் சக்தியாக உருவெடுக்க வைத்து இன்று அதற்குப் பெரும் வெற்றியையும் தேடிக்கொடுத்துள்ளது.

இப்போது ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியை அணிந்து கொண்டாலும் அதன் உண்மையான முகம் மாறப்போவதில்லை. ஜே.வி.பியின் முகப்பூச்சை நம்பி தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜே.வி.பிக்கு வாக்களித்திருந்தார்கள். ஜே.வி.பி. ஆட்சிபீடம் ஏறி இவ்வளவு மாதங்கள் கடந்த பின்னருங்கூட தமிழின விரோதச் செயற்பாடுகளில்தான் ஈடுபட்டமைக்காகச் சிறுவருத்தங்கூட தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வ அணுகு முறைகள் எதனையும் வெளிக்காட்டவில்லை. தொடர்ந்தும் ஜே.வி.பியை நம்பாமல் உள்ளூராட்சித் தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஜே.வி.பியை அடியோடு நிராகரிக்கவேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

## இருவரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிக்கு அருகாமையில் 40 வயது முதல் 45 வயது வரை மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் வடிகாலிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஹாலிஎல ரயில் நிலையத்திற்கு அருகாமையில் 50 முதல் 55 வயது வரை மதிக்கத்தக்க மேலுமொரு ஆணின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இவர்களின் உயிரிழப்புக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. நீதிவான் சடலங்களை பார்வையிட்டதன் பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலங்கள் பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்



படவிருந்தன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ரயில் - ஓட்டோ மோதல் இருவருக்குப் படுகாயம்

கொஸ்கம – அளுத்அம்பலம் ரயில் கடவைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் என கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில்ல் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இந்து மக்களின் மன உணர்வுகளை கீறிக் காயப்படுத்தியுள்ளார் பிரதமர்

## மாவை சம்பவம் குறித்து சிறிகாந்தா சீற்றம்

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரதமர் இந்து மக்களின் மன உணர்வுகளை கீறிக் காயப்படுத்தியுள்ளார். அதற்காக மக்களிடம் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் 06ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது தேர்தல் சட்டம் அமுலில் இருக்கிறது. தேர்தல் சட்டங்களை கடைப்பிடிக்குமாறு தேர்தல் திணைக்களம் சகல கட்சிகள், சுயேச்சை குழுக்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் ஹரிணி அமரசூரியர் கலந்து கொண்டார்.

அவர் கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் நடைபெற்ற போது, ஆலயத்தினுள் அதிரடியாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் புகுந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டிற்கு அவர் இடையூறு விளைவித்துள்ளார்.

பிரதமரின் பாதுகாப்புக்காக வந்தவர்கள், காலணிகளோடு ஆலய வளாகத்தில் புகுந்துள்ளார்கள். அது இந்து மக்களுக்கு மிகப் பெரிய மனவுளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மாவிட்டபுரத்திற்கு சென்றது மிக மலிவான தேர்தல் பிரசாரத்திற்காகவே. மாவிட்டபுரத்திற்கு கடந்த காலங்களில் பல அரசியல்வாதிகள் வந்து சென்று இருக்கின்றார்கள். அவர்கள் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கவில்லை.

பிரதமரின் அதிரடி வருகையால் பக்தர்களின் வயிற்



எரிச்சலைத்தான் அவர் பெற்று சென்றுள்ளார். இந்த மலிவான அரசியலுக்கு நாம் கடுமையான கண்டனங்களைத் தெரிவிக்கிறோம்

இந்து மக்களின் உணர்வுகளைக் கீறி காயப்படுத்தியுள்ளார் பிரதமர். தனது செயலுக்காக மக்களிடம் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும். இதற்கொ பிரதமர் என்ன சொல்லப் போகிறார்?

அதேபோன்று நேற்றைய தினம் காரைநகர் மற்றும் நீர்வேலி பகுதியில் ஆலய வளாகத்தில் மேடை அமைத்து, தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பிரதமர் ஈடுபட்டு இருந்தார்.

இவ்வாறான மலிவான அரசியலை நாட்டின் பிரதமர் செய்யக் கூடாது. இங்குள்ள எடுபிடி அரசியல்வாதிகள், சின்ப்பிள்ளை அரசியல் செய்பவர்களின் சொல்லைக் கேட்டு அவர் நடக்கக் கூடாது.

வடக்கை நோக்கி பல அரசியல்வாதிகள் உள்ளூராட்சித் தேர்தலுக்காகப் படையெடுத்து வருகின்றனர். அவர்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மதத் தலங்களில் மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். மலிவான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தேர்தல் விதிமுறைகள் மீறல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் தமது கடமைகளைச் சரியாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். – என மேலும் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெளிப்படாத நீதி

கொடூர இன யுத்தத்தினால் பல பத்தாயிரம் அப்பாவிப் பொது மக்களை - போராளிகளை - படையினரை - பறிகொடுத்த, பலி கொடுத்த நாடு இலங்கை. அதிலும் பல்லாயிரக்கணக்கானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். போராட்டத்தின்நடுவில்காணாமல் போனோரின் எண்ணிக்கை பல பத்தாயிரங்கள். அவர்கள் தொடர்பில் எந்த முடிவும் தெரியாமல் உறவினர்கள் இன்றும் - இன்னும் - பேரவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கையில் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கான முயற்சிகள் செம்மையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து நீடிக்கின்றது.

உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயல் திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு, காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையம் ஆகிய நான்கு அமைப்புகளும் ஒன்றிணைந்து ஏற்கனவே 'இலங்கையில் உள்ள பாரிய மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வு பணிகளும்' என்ற தலைப்பில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன.

இப்போது இந்த மனிதப் புதைகுழிகளைத் தோண்டி உண்மைகளைக் கண்டறியும் நடவடிக்கைகளுக்கு இலங்கையிலிருந்த எந்த அரசாங்கமும் முழுமையான ஆதரவையோ ஒத்துழைப்பையோ வழங்கவில்லை என சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்திருக்கிறார். இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கங்களிடம் அரசியல் உறுதிப்பாடோ, சட்டப்படி கடமையாற்ற வேண்டிய திடசங்கற்பமோ, உண்மைகளை கண்டறிந்து வெளிப்படுத்துவதில் பற்றுதியோ இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் என்பது மனித குலத்திற்கு எதிரானகுற்றங்களில்மிகவும்பாரதூரமானது. கொடூரமானது. பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் பெரும் துயரத்தினை அனுபவிக்கின்றனர். நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இறுதி முடிவொன்று இல்லாததால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த துயரத்தை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் தங்கள் இறுதி நாள்கள் வரை - வாழ்வின் இறுதிக் கணம் வரை - அந்தத் துயரத்தை அனுபவித்து, அந்த வேதனையோடே அவர்கள் தம் வாழ்வை முடிக்க வேண்டிய அவலத்தில் இருக்கின்றனர் என்ற உண்மையை - யதார்த்தை - அவர் எடுத்துரைக்கின்றார்.

செம்மணி, வந்தாறுமூலை, மன்னார் ச.தொ.ச. வளாகம், யாழ்ப்பாணம்துரையப்பாவிளையாட்டரங்கு, கொக்குத்தொடுவாய் என்று இதுவரை இலங்கையில் வெளிப்பட்ட மனிதப் புதைகுழிகள் பலப்பல.

இத்தகைய மனிதப் புதைகுழிகளை சட்டப்படி அகழ்ந்து, விஞ்ஞான முறைப்படி ஆய்ந்து, உலக நியதிப்படி உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்துவதற்கு அரச ஒத்துழைப்பு முழுமையாகத் தேவை.

ஆனால் இலங்கையின் அரசாங்கங்களோ மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது முதல் அதற்கான நிபுணர்களைகளை ஏற்பாடு செய்து ஒழுங்குபடுத்துவது வரை குழப்பங்களை ஏற்படுத்தி, பிரச்சினைகளை உருவாக்கியபடி மனிதப் புதைகுழி விவகாரங்களை நீர்த்துப் போகச் செய்வதிலேயே சிரத்தையாகச்செயற்படுகின்றன என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்



# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உள்ளூராட்சிவேட்பாளர் அறிமுகம்

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சித் தேர்தல் - 2025 வேட்பாளர் அறிமுக நிகழ்வு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ். நகரில் உள்ள வை.எம்.சி.ஏ. மண்பத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபையின் வேட்பாளர் அறிமுகம் சட்ட ஆலோசகர் காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் நா.சிறிகாந்தா, பசுமை இயக்கத்தின் தலைவர் பொன். ஐங்கரநேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்ட ஆலோசகர் காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# திருகோணமலையில் மாற்றுத்திறனாளிகளில் தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்.)

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பொருள்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி திட்டம் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு மூதூர், கிண்ணியா கோமரன்கடவெல, குச்சவெளி, தம்பலகாமம், பட்டினமும் சூழலும், வெருகல் ஆகிய பகுதிகளில் இருந்து பயனாளிகள் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருள்களுடன் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்ட மேலதிக அரச அதிபர் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத் தனித்தனியாக பார்வையிட்டார். எவ்வாறு இந்தப் பொருள்களுக்குப் பெறுமதியை அதிகரிக்கலாம் என்றும், பெறுமதியை அதிகரிப்பதற்கு எவ்வாறான உதவிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கலாம் என்பது தொடர்பாகவும் விரிவாக ஆலோசனை வழங்கப்பட்டது.

வளவளராக கலந்து கொண்ட விதாதா மற்றும் சிறு கைத்தொழில் உத்தியோகத்தர்கள் பொருள்களின் பெறுமதியிடல், பொருள்களுக்கான வியாபார குறியீட்டை எவ்வாறு தெரிவு செய்வது, விலையிடல் போன்ற தலைப்புகளில் ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியான விளக்கங்களை வழங்கினர்.

பொருள்களைச் சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் விளக்கம் வழங்கப்பட்டது. அதாவது பொருள்களுடையச் சந்தைப்படுத்தல் தொடர்பாக எவ்வாறு சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்தி இலகுவான முறையில் பொருள்களைச் சந்தைப்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் வளவாளர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், மற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நுரைச்சோலை வீட்டுத்திட்டம் விரைவில் பகிர்ந்தளிக்கப்படும்!

## ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பு




(அபு அலா )

சவூதி அரசால் அக்கரைப்பற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தை மிக விரைவில் இந்தப் பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிப்பேன் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று (11) அக்கரைப்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# நுரைச்சோலை....



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களுக்கு முன்னர் இருந்த சவூதி அரசால் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளைக் கொண்ட இந்த நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தின் நன்மையை மக்கள் இன்னும் அடையவில்லை.

இது தொடர்பில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் என்னிடம் மிகவும் கவலையடைந்து பேசினார். அத்துடன் இந்த வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடுகளைப் பயனாளிகளுக்கு வழங்குமாறும் சவூதி தூதுவர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த வீட்டுத் திட்டத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அந்த வீடுகளை மிக விரைவில் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பேன்.- என்றார்.






# புதுவருடத்தை முன்னிட்டு பட்டிப்பளையில் கண்காட்சி

(எஸ்.எஸ்.அமிர்தகழியான் )

பட்டிப்பளையில் சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தையும், உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான பிரதேச மட்ட விற்பனைக் கண்காட்சியும் மட்டக்களப்பு மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் எஸ். ராஜ்பாபு தலைமையில் கொக்கட்டிச் சோலை பொதுச் சந்தையில் இன்று நடைபெற்றன.

பட்டிப்ளையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரின் ஏற்பாட்டில் உள்ளூர் சுய தொழில் உற்பத்தி முயற்ச்சியாளர்களின் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பை கொக்கட்டிச்சோலை பொதுச் சந்தையில் விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தனர்.

தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுடன், நுகர்வோர்களிடம் இருந்து வரும் கேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புகளைச் சலுகை விலையில் மக்கள் கொள்வனவு செய்வதற்கான களமாக இந்தக் கண்காட்சி காணப்படுகின்றது.

இந்தப் பிரதேச செயலக பிரிவில் உற்பத்தி செய்யப்படும் பெறுமதிசேர் பொருட்களை பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

இந்த நிகழ்வில் பட்டிப்பளை உதவி பிரதேச செயலாளர் திருமதி மேனகா புவிக்குமார், சமூர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், வங்கி அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# மன்னார் மாவட்ட பனம் பொருள் உற்பத்தியாளர்கள் ஒன்றுகூடல்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட பனம் பொருள் உற்பத்தியாளர்களின் எதிர்கால சந்தைப்படுத்த நடவடிக்கைகளை முன்னிறுத்திய திட்டமிடலுக்கான ஒன்று கூடல் மாவட்ட யுஎன்டிபி நிறுவன நிதி அனுசரணையோடு உலகளாவிய சுற்றுச் சூழலியல் வசதி திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட தலைவர் யு. பெனில்டஸ் பீரிஸ் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

மன்னாரின் தனியார் விடுதி ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் இதன் ஒருங்கிணைப்பாளர் தி. கணேஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

பனம் பொருள் உற்பத்தியாளர்கள் இனிவரும் நாள்களில் காலத்துக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்களைச் சார்ந்திருக்கும் உள்ளூர் வளங்களையும் அரச வளங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்று நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் ரமேஷ் , ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி. ஜெயவதனி, தி. கணேஷ் மற்றும் முகாமையாளர் கலாநிதி. சம்பா, வளவாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த ஒன்று கூடலில் 12 பதிவு செய்யப்பட்ட பனம்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்தக் கூட்டத்தின் பிரதான நோக்கம் பனம் பொருள் உற்பத்தியாளர்கள், சந்தைப்படுத்துவோர் , ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கிடையிலான புரிந்துணர்வுடன் கூடிய பரஸ்பர ஒன்றிணைப்பும், கூட்டமைப்பாக உருவெ

(12ஆம் பக்கம் பார்க்க)



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



## மன்னார்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுத்தலுமான செயற்பாட்டை வலுப்படுத்துவதாகும் அமைந்திருந்தது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டமைப்புக்கு உரிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பனங்களி , கிழங்கு , வெல்லம் , பதநீர் , ஒடியல் , பனாட்டு , பனங்கட்டி இவற்றோடு பனையோலைக் கைவினைக் கலைஞர்களும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் இருந்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து வளவாளர்களுடைய ஆலோசனையின் படி தமக்கு ஏதுவான சந்தைப்படுத்தல் என்ற பகுதிக்குள் தம்மை தமது உற்பத்தி பொருட்களை சரியாக அழகாக, சுத்தமாக மேற்கொள்ளும் போது நல்ல சந்தை வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி தரம் பெறப்படும் என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர்.







# உடப்பு - பாரிப்பாடு முருகன் ஆலயத்தில் சங்காபிஷேகம்

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பு – பாரிப்பாடு ஸ்ரீ பாலமுருகன் ஆலய வருஷாபிஷேகமும், சங்காபிஷேகமும் வெள்ளிக்கிழமை (11)இடம்பெற்றன. கணபதி வழிபாட்டுடன்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. யாக பூஜையைத் தொடர்ந்து, பிரதான கும்பம் உள்வெளி வீதி வந்து மூலஸ்தான எம்பெருமானுக்கு கும்பநீர் அபிஷேகம் இடம்பெற்றது.

அத்துடன் விஷேட பூஜை இடம்பெற்றது. பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு, அன்னதானமும் நடைபெற்றது.

சங்காபிஷேகத்தில் சிவஸ்ரீ குமார பஞ்சாட்சர குருக்கள் மற்றும், பிரம்மஸ்ரீ சிவ தர்ஷக சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மூளாய் முத்துக்குமாரசாமி ஆலய தேர்த்திருவிழா






# தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு





**(றியாஸ் ஆதம்)**

உலக சுகாதார ஸ்தாபனமும், சுகாதார அமைச்சும் அதிகளவாக அசையும் மாதமாக ஏப்ரல் மாதத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனை முன்னிட்டு தொற்றா நோயிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் நோக்கில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கும், நடைபவனியும் நிந்தவூர் வெளவாலோடை பிரதேசத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜீவா தலைமையில், கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத்தின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர் கே.எல். மன்சூர், பொதுச் சுகாதார தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கான தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வெளவாலோடை கிளினிக் நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் தொற்றா நோய் தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் இதன்போது விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வு நடைபவனியும் இடம்பெற்றது.

# அல் - மஸ்ரபுல் கூட்டுறவு சங்கம் வட்டியில்லா கடனுதவி வழங்கியது





(அஸ்லம் எஸ்.மௌலானா)

சம்மாந்துறை அல் – மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கமானது 24 ஆயிரம் அங்கத்தவர்களுக்கு வட்டியில்லா கடனுதவியை வழங்கியுள்ளது என்று அதன் தலைவர் ஐ.எம்.இப்றாஹிம் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள் சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்திற்கு களக்கற்றல் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜாபீர், சங்கத்தின் தலைவர் நா.ஏரம்பமூர்த்தி, பொது முகாமையாளர் மற்றும் பணியாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கமானது ஆறு கிளைகள் ஊடாக வட்டியில்லா கடனுதவு சேவையை முன்னெடுத்து வருகின்றது.

இதுவரை 24 ஆயிரம் அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. "வட்டி இல்லாத பொருளாதாரம் அருள் நிறைந்த எதிர்காலம்" எனும் திட்டத்தின் கீழ் இக்கடன் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அதன் தலைவர் ஐ.எம். இப்றாஹிம் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சங்கத்தால் முன்னெடுக்கப்படும் கடன் சேவை மற்றும் டிஜிட்டல் நடவடிக்கைகளை ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கியினூடாக முன்னெடுப்பது தொடர்பான சாத்தியங்களை கண்டறிவதே இந்தக் களக்கற்றல் விஜயத்தின் நோக்கம் என்று அதன் தலைவர் நா.ஏரம்பமூர்த்தி தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கம் 27.12.2024 ஆம் திகதி கிராமிய வங்கியை ஆரம்பித்து இதுவரை சுமார் நூறு அங்கத்தவர்களுக்கு 35 லட்சம் ரூபா கடன் வழங்கியுள்ளது என்றும் அதன் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கல்முனை பொதுச் சந்தையில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்க நடவடிக்கை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பொதுச் சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் வருமான பரிசோதகர் எம்.எஸ்.எம். உபைதுல்லாஹ், விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர் நஸ்ரின் ஹராஜா, கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஏ.பி. ஜமால்தீன், செயலாளர் ஏ.எல்.கபீர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது சந்தையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பிலும் அங்கு வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சுமூகத் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தையிலுள்ள கடைகளுக்கான வாடகை நிலுவைகளை அறவிடுதல், வாடகைக் கட்டணங்களை சீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை மாநகர பொதுச் சந்தையினதும் வர்த்தகர்களதும் நலன் கருதி கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வர்த்தகர் சங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும் என்று சங்கப் பிரதிநிதிகள் இதன்போது உறுதியளித்துள்ளனர்.





# அ.தி.மு.க - பா.ஜ.க. தமிழகத்தை அடகு வைக்கும் துரோகக் கூட்டம்

## ஸ்டாலின் விமர்சனம்

"இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்து அ.தி.மு.கவை அடமானம் வைத்தவர்கள், தமிழ்நாட்டை அடமானம் வைக்கத் துடிக்கிறார்கள். அ.தி.மு.க. - பா.ஜ.க. தோல்விக் கூட்டணியே ஒரு ஊழல்தான். பா.ஜ.க. தனியாக வந்தாலும், எவர் துணையோடு வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டக் காத்திருக்கிறார்கள்."

- திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அது தொடர்பான தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அ.தி.மு..க - பா.ஜ.க. கூட்டணி என்பது தோல்விக் கூட்டணி. தொடர் தோல்வியை அந்த அணிக்குக் கொடுத்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். இதே தோல்விக் கூட்டணியை மீண்டும் உருவாக்கி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

நேற்றைய தினம் சென்னை வந்த உள்துறை அமைச்சர் அமித்ஷா அளித்த பேட்டி, அவர் வகிக்கும் பதவிக்குத் தகுதியானதாக இல்லை. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்து கொள்வது அவரது விருப்பம் சார்ந்தது. ஆனால் எதற்காக இந்தக் கூட்டணியை உருவாக்கினார்கள், எந்தக் கொள்கையின் அடிப்படையில் கூட்டணி சேர்ந்துள்ளார்கள் என்று சொல்லவில்லை. மாறாக, குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்கப் போவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி என்று அறிவித்த மேடையில் ஊழலைப் பற்றி உள்துறை அமைச்சர் பேசிய காட்சியைப் பார்த்து தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கவே செய்வார்கள். ஊழலுக்காக இரண்டு முறை முதலமைச்சர் பதவியை விட்டு விலக வைக்கப்பட்டவர் ஜெயலலிதா. பெங்களூா ர் சிறப்பு நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நடைபெற்ற வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக்கில் நான்காண்டு சிறைத் தண்டனை பெற்றவர் ஜெயலலிதா. அவரது கட்சியுடன் கூட்டணி வைக்கும் போது பேசத் தகுதியான வார்த்தையா ஊழல் என்பது?

இன்றைய அ.தி.மு.க. பொறுப்பாளர்களது உறவினர் குடும்பங்களைச் சுற்றியும் மத்திய புலனாய்வு அமைப்புகள் இரண்டு சோதனைகள் நடத்தியதையும், அதில் இருந்து தப்பித்துக் கொள்ள பா.ஜ.க. தலைமையை நோக்கி அவர்கள் ஓடி வந்ததையும், அதையே நிபந்தனையாக வைத்து கூட்டணியை உறுதி செய்ததையும் உணராதவர்கள் அல்ல தமிழ்நாட்டு மக்கள். அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்ததே "ஊழல்" தான் என்பதை அனைத்தும் அறிந்த தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். இரண்டு ரெய்டுகள் நடந்தவுடன் அ.தி.மு.கவை அடமானம் வைத்திருப்பவர்கள், அடுத்து தமிழ்நாட்டை அடமானம் வைக்கத் துடிக்கிறார்கள்.

தமிழை ஒழிக்க இந்தி, தமிழர்களது வளர்ச்சியைத் தடுக்க பல்வேறு சதித் திட்டங்கள், தமிழ்நாட்டு உரிமையைப் பறிக்க தொகுதி மறுவரையறை - எனத் திட்டமிட்டு தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் சிதைத்து சீரழிக்க நினைக்கிறது பா.ஜ.க. தலைமை. பழைய கொத்தடிமைக் கூடாரமான அ.தி.மு.கவின் தலைமையை மிரட்டிப் பணிய வைத்து தன்னுடைய சதித் திட்டங்களை பா.ஜ.க. நிறைவேற்றப் பார்க்கிறது. பா.ஜ.க. தனியாக வந்தாலும், எவர் துணையோடு வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டக் காத்திருக்கிறார்கள். சுயமரியாதையின்றி டில்லிக்கு மண்டியிட்டு தமிழ்நாட்டை அடகு வைக்கும் துரோகக் கூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க விடையளிப்பார்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# மோடியை சந்திக்கவுள்ளார் அமெரிக்க துணை ஜனாதிபதி

அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேம்ஸ் டேவிட் வென்சி இந்திய பிரதமர் மோடியை சந்திக்க உள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, அமெரிக்க துணை ஜனாதிபதி எதிர்வரும் 21ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

4 நாள்ட்கள் விஜயம் மேற்கொள்ளவுள்ள டேவிட் வென்சி தனது மனைவி உஷாவுடன் இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.

இந்த பயணத்தின்போது அமெரிக்கா, இந்தியா இடையேயான வர்த்தகம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



மேலும், உலக அளவில் அமெரிக்கா, சீனா இடையே வர்த்தகப்போர் தீவிரமடைந்து வரும் நிலையில் அமெரிக்க துணை ஜனாதிபதியின் இந்திய பணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.



# பா.ஜ.க. – தி.மு.க. மறைமுகக் கூட்டணி அம்பலம் 2026 இல் த.வெ.கவுக்கே வெற்றி என்கிறார் விஜய்

“பா.ஜ.க. – தி.மு.க. மறைமுகக் கூட்டு என்பதை வெட்ட வெளிச்சம் ஆக்கியுள்ளது. 2026 தேர்தல் களமானது தமிழக வெற்றிக் கழகத்துக்கும், தி.மு.கவுக்கும் இடையே தான்.”

– இவ்வாறு தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“குறைந்தபட்ச அரசியல் அறத்தைக்கூடத் தொலைத்த, ஒன்றியத்தை ஆளும் பிளவுவாத பா.ஜ.கவும், மாநிலத்தை ஆளும் ஊழல் மலிந்த அரசியல் கலாசாரத்தின் ஊற்றுக்கண் தி.மு.கவும் வெளியில்தான் கொள்கைப் பகையாளிகள். ஆனால், நாம் ஏற்கெனவே சொன்னது போல, உள்ளுக்குள் மறைமுக உறவுக்காரர்களே.

ஊழல் நடைபெற்ற மற்ற மாநிலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன? ஊழல் மலிந்த தமிழ்நாட்டில் நடப்பது என்ன? மற்ற மாநிலங்களில் ஊழல் செய்தவர் முதலமைச்சரே ஆனாலும் தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை இந்த நாடறியும். ஆனால் இங்கோ ஊழல் செய்தவர் மீது நடவடிக்கை பாயும் போது, உடனடியாக அவர் டெல்லிக்குப் பயணம் மேற்கொண்டால் அவர் மீதான நடவடிக்கையில் சுணக்கத்தை ஏற்படுத்தி, நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர் எந்த ஊழலையும் செய்யாதவர் போன்று செயல்படுவதையும் இந்த நாடறியும். இது போன்ற பல செயல்பாடுகள், பா.ஜ.க – தி.மு.க. மறைமுகக் கூட்டு என்பதை வெட்டவெளிச்சம் ஆக்கியுள்ளன.

தி.மு.கவை மறைமுகக் கூட்டாளியாக ஏற்கெனவே தயார் செய்துவிட்ட நிலையில், தன்னுடைய பழைய பங்காளியான அ.இ.அ.தி.மு.கவைப் பகிரங்கக் கூட்டாளியாகப் பா.ஜ.க. மீண்டும் கைப்பிடித்துள்ளது ஒன்றும் ஆகப் பெரிய ஆச்சர்யமில்லை. பிளவுவாத சக்திகளுக்குச் சாமரம் வீசிய காரணத்தாலேயே, ஏற்கெனவே மூன்றுமுறை தமிழ்நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு நிர்ப்பந்தக் கூட்டே இப்போது ஏற்பட்டுள்ளது என்பது நாம் சொல்லித்தான் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை.

2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், ‘நாங்கள்தான் தி.மு.கவுக்கு எதிரான ஒரே அணி’ என்று பா.ஜ.கவும், ‘தாங்கள்தான் பா.ஜ.கவுக்கு எதிரான அணி’ என்று தி.மு.கவும் முழக்கமிட்டு ஒரு நாடகத்தை நடத்துவர். தமிழ்நாட்டு மக்கள் விழித்துக்கொண்டுவிட்டனர். இனி, தி.மு.கவும் பா.ஜ.கவும் எத்தகைய வேடங்களையும் பூண்டு, நாடகங்களை நடத்த இயலாது.

தங்களை ஏமாற்றி வந்தவர்கள் யார்? தங்களுக்கென்று உண்மையாக உழைப்பவர்கள் யார்? தங்களுடன் உண்மையான உணர்வுடன் நிற்பவர்கள் யார்? தங்கள் வீட்டுப் பிள்ளைகள் யார்? தங்களுக்கான உண்மையான மக்களாட்சியைத் தர வல்லவர்கள் யார்? என்பதை மக்கள் உணரத் தொடங்கி உள்ளனர். அதை நிரூபிக்கும் விதமாக, தங்கள் மனத்துக்குள் ஒரு தீர்க்கமான முடிவையும் ஏற்கெனவே எடுத்துவிட்டனர்.

நாம், ஏற்கெனவே நம்முடைய பொதுக்குழுவில் அறிவித்தது போலவே, 2026 தேர்தல் களமானது தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற, ஒவ்வொரு வீட்டிலும் தங்களின் பிள்ளையாகக் கருதக் கூடிய தமிழக வெற்றிக் கழகத்திற்கும், வெற்று விளம்பரம் செய்து மக்கள் விரோத ஆட்சி நடத்தும் தி.மு.கவிற்கும் இடையே தான். மக்களுக்கு எதிரான, மக்களாட்சிக்கு எதிரான தீய சக்திகளை எதிர்த்து நின்று, களமாடி வெல்லப் போவது தமிழக வெற்றிக் கழகம் மட்டுமே என்பதை மீண்டும் இங்கே பதிவு செய்கிறேன்.

பிளவுவாத பா.ஜ.க. மற்றும் மக்கள் விரோத தி.மு.க.வின் பகல் கனவு மற்றும் கபட நாடகமான, மறைமுகக் கூட்டுக் கணக்குகளுக்கும் மக்களால் நிராகரிக்கப்பட்ட நேரடி நிர்ப்பந்தக் கூட்டுக் கணக்குகளுக்கும் தமிழக மக்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் தகுந்த பாடம் புகட்டி, விரட்டியடித்து தூக்கி எறியப் போவது உறுதி. அதே நேரம் நம்மை உரிய இடத்தை நோக்கி அழைத்துச் சென்று, உயரிய மக்களாட்சி அங்கீகாரத்தை வழங்கப் போவது என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# அமெரிக்காவின் வரி கொள்கை மிகவும் சிறப்பாக செயல்படுகிறது

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

அமெரிக்காவின் வரிக் கொள்கை சிறப்பாக செயல்படுகிறது என்றும் அமெரிக்காவும் உலகிற்கும் மிகவும் உற்சாகமாக இருக்கிறது எனவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எங்கள் வரி கொள்கையில் நாங்கள் மிகவும் சிறப்பாக செயல்படுகிறோம். இது அமெரிக்காவிற்கும் உலகிற்கும் மிகவும் உற்சாகமாக இருக்கிறது! இந்த மாற்றம் வேகமாக முன்னேறி வருகிறது," என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்புக்கு சீனா பதிலடி கொடுத்து வருகிறது. சீன பொருட்களுக்கான வரியை அமெரிக்கா தற்போது 145 வீதமாக உயர்த்தி உளள நிலையில், பதிலுக்கு சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான வரியை 125 வீதமாக உயர்த்தி உள்ளது. உலகின் முதல் இரண்டு பெரிய பொருளாதாரங்களாக அமெரிக்காவும் சீனாவும் இருந்து வரும் நிலையில், அவர்களுக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார மோதல் குறிப்பாக இரு நாடுகளுக்கும் பரவலாக உலக நாடுகளுக்கும் சவால்களை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், தனது வரி விதிப்பு மற்றும் சீனாவுக்கான வரி அதிகரிப்பை ட்ரம்ப் நியாயப்படுத்தி இருக்கிறார்.

அதோடு, இந்த விவகாரம் தொடர்பாக சீனாவுடன் பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் ட்ரம்ப் அறிவித்திருக்கிறார்.

"அவர்(சீன ஜனாதிபதி) நீண்ட காலமாக எனக்கு நண்பராக இருந்து வருகிறார். இரு நாடுகளுக்கும் மிகவும் நன்மை பயக்கும் ஏதாவது ஒன்றை இறுதியில் நாங்கள் உருவாக்குவோம் என்று நான் நினைக்கிறேன்." என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முதலில் தொடர்பு கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் போட்டி வரி விதிப்பை அடுத்து, முதலீட்டாளர்கள் அமெரிக்க அரசாங்கப் பத்திரங்கள் மீதான தங்கள் முதலீட்டை கைவிட்டுள்ளனர். இதனால், டொலரின் மதிப்பு சரிந்துள்ளது. இதனிடையே வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் கரோலின் லீவிட், அமெரிக்கா தாக்கப்படும்போது ஜனாதிபதி ட்ரம்ப் கடுமையாக பதிலடி கொடுப்பார் என்பது தெளிவாகி உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ஒருதலைப்பட்ச கொடுமைப்படுத்துதலை எதிர்ப்பதில் பெய்ஜிங்குடன் ஐரோப்பிய ஒன்றியம் கைகோர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். பெய்ஜிங்கில் பேசிய அவர், "சீனாவும் ஐரோப்பாவும் தங்கள் சர்வதேச பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் ஒருதலைபட்சமான கொடுமைப்படுத்துதல் நடைமுறைகளை கூட்டாக எதிர்க்க வேண்டும். இது சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், சர்வதேச நியாயத்தையும் நீதியையும் பாதுகாக்கும்." என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மற்றும் சீனப் பொருளாதாரங்களுக்கு இடையிலான வர்த்தக மோதலால் நுகர்வோர் பாதிக்கப்படுவார்கள் என்றும் இது உலகளாவிய மந்தநிலையைத் தூண்டக்கூடும் என்றும் பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

# பப்புவா நியூ கினியாவில் நிலஅதிர்வு



பப்புவா நியூ கினியாவின் நியூ பிரிட்டன் பகுதியில் இன்று நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலஅதிர்வானது 5.95 மெக்னியூட் அளவில் ஏற்பட்டுள்ளது.

பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலஅதிர்வு ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும், நிலஅதிர்வின் காரணமாக ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

பக்கம் 03

கனடா முரசு

சனிக்கிழமை 12/04/2025

## ரொரண்டோவில் காலநிலை மாற்றம்

ரொரண்டோவில் இந்த வார இறுதியில் வெயிலுடனும் ஓரளவு வெப்பநிலையுடைய வானிலை காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நேற்று இடைவிடாத 03




# அமெரிக்க ஜனாதிபதி தொடர்பில் ஒன்றாரியோ முதல்வர் அதிருப்தி

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் செயற்பாடுகள் குறித்து ஒன்றாரியோ மாகாண முதல்பர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.**

**டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த 90 நாள் வரி விதிப்பு இடைநிறுத்தத்தில் கனடா சேர்க்கப்படாமை குறித்து போர்ட் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.**

**இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான வர்த்தக தொடர்புகள் காணப்படும் நிலையில் இந்த நடவடிக்கை ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இரு நாடுகளினதும் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய திர்வுத் திட்டங்களை வழங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் கடந்த வாரம் அறிவித்த வரிவிதிப்பில் சில தற்காலிக இடைநிறுத்தங்களை அறிவித்திருந்தாலும், அனைத்து நாடுகளுக்கும் 10 வீத அடிப்படை வரி தொடர்ந்து விதிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், கனடா 60 பில்லியன் டொலர்வரையிலான அமெரிக்க பொருள்களுக்கு பதிலடி வரிகளை விதித்துள்ளது.

மேலும், வர்த்தகப் போர் தொடருமானால், மேலும் 95 பில்லியன் டொலருக்கான வரிகளையும் விதிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கனடாவுக்கு விதிக்கப்படும் வரி என்பது, அமெரிக்கர்களுக்கே வரியாகும். அதுவே நாம் பார்க்க விரும்பாத கடைசி விஷயம், என்றும் அமெரிக்கா வர்த்தகப் போரை நிறுத்தினால், கனடாவும் பதிலடி வரிகளை நீக்கும் என நம்புவதாகவும் போர்ட் தெரிவித்துள்ளார்.







# ட்ரம்பின் செயற்பாடுகளால் அமெரிக்கா செல்லும் கனடியர்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏற்படுத்திய வரி மோதல் மற்றும் அவரது மிரட்டல் கருத்துகள் காரணமாக, அமெரிக்காவுக்கு செல்லும் கனடியர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி விடயத்தை கனேடிய புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், அமெரிக்காவிலிருந்து காரில் வீடு திரும்பிய கனேடியர்கள் முந்தைய ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது 32 வீதமாக குறைந்துள்ளனர்.

இது பெருந்தொற்று காலத்திற்குப் பின் முதல் மிகப்பெரிய சரிவாக பதிவாகியுள்ளது என கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 02







# வடகிழக்கு கல்கரியில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு; ஒருவர் படுகாயம்

கனடாவில் வடகிழக்கு கல்கரி பகுதியில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் வடகிழக்கு கல்கரியில் கோரல் ஸ்பிரிங்ஸ் பகுதியில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டு இருப்பதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கல்கரி பொலிஸாருக்கு, கோரல் ஸ்பிரிங்ஸ் வட்டம் N.E. பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இரவு சுமார் 10:35 மணிக்கு துப்பாக்கிச் சூடு நடந்ததாக அவசர அழைப்பு வந்தது.

விரைந்து வந்த பொலிஸார், சம்பவ இடத்தில் இரண்டு ஆண்கள் ஆபத்தான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதை கண்டனர்.

இருவரும் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

இருப்பினும், சிகிச்சை பலனளிக்காமல் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மற்றொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

முதற்கட்ட விசாரணையில், இரு நபர்களும் துப்பாக்கி சூடு நடந்த வீட்டில் வசிப்பவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் வேறு யாரும் சந்தேகத்திற்குரிய நபர்களாக தற்போது கருதப்படவில்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை நடந்து வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.

# கனடா உள்ளிட்ட நாடுகளில் இன்ஸ்டகிராம் பயன்படுத்த சிறுவர்களுக்கு கட்டுப்பாடு




கனடா மற்றும் இங்கிலாந்தில் இன்ஸ்டகிராம் பயன்படுத்த சிறுவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

உலகின் முன்னனி சமூக வலைத்தள நிறுவனமாக 'மெட்டா' நிறுவனத்தின் சமூக வலைத்தள செயலிகளான பேஸ்புக், வாட்ஸ் ஆப், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றை உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தநிலையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பேஸ்புக் மெசஞ்சர், இன்ஸ்டாகிராம் பயன்படுத் துவதற்கு புதிய கட்டுப்பாட்டை மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.

அதன்படி பெற்றோர்கள் தங்களின் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கணக்குகளை நேரடியாக மேற்பார்வையிட கூடுதல் வசதிகளை அளித்துள்ளது.

இதன்மூலம் பெற்றோர் அனுமதி இல்லாமல் சிறுவர்கள் இன்ஸ்டாகிராமில் நேரலையில் தோன்றுதல், நிர்வாண படங்கள் பரிமாறுவதற்கு தடை விதிக்கப்படுகிறது.

பெற்றோர்கள் தங்களுடைய கணக்குகளுடன் குழந்தைகளின் கணக்குகளை இணைந்து இதனை செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இந்த கட்டுப்பாடு அமலுக்கு வருகிறது.

## ட்ரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், விமானத்தில் திரும்பியவர்களின் எண்ணிக்கையும் 13.5 வீதமாக குறைந்துள்ளது.

ட்ரம்ப் மேற்கொண்ட தாக்குதலான வரி தீர்மானங்கள், மற்றும் 'கனடா ஒரு அமெரிக்க மாநிலமாக மாறும்' என கூறியமை, கனேடியர்கள் மத்தி யில் கடும் அதிருப்தியை ஏற்படுத் தியுள்ளது.

அத்துடன், இந்தச் சறுக்கல் கனேடியர்களின் தற்போதைய உணர்வுகளை பிரதிபலிக்கிறது பயண நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் கனேடியர்கள் சிலர் எதிர்நோக்கிய கசப்பான அனுபவங்களும் இந்த அதிருப்தி நிலைமைக்கு ஏதுவாக அமைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், 30 நாள்களுக்கு மேல் அமெரிக்காவில் தங்கும் கனேடியர்களுக்கு புதிய பதிவு விதிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

இதேவேளை, கனேடிய டொலரின் பெறுமதி தற்போது அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது 70 சதவிகிதம் மட்டுமே என்பதால் என சிலர் பொருள்கள் வாங்க அமெரிக்காவுக்குச் செல்லும் எண்ணத்தை தவிர்த்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒன்றாரியோவில் வீடொன்றின் முன் கைவிடப்பட்ட நிலையில் சிசு மீட்பு

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சிசுவொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிறந்து ஒருநாளான சிசுவொன்றே இவ்வாறு மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


லண்டன் நகரின் ஸ்டெர்லிங் தெருவில் உள்ள வீடொன்றின் முகப்புப் பகுதியில் இந்த குழந்தை வைக்கப்பட்டிருந்தது.

பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று குழந்தையை மீட்டுள்ளனர்.

இந்த சிசு ஒரு நாளான குழந்தையாக இருக்க வேண்டுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுமையான குளிருடனான கால நிலையில் இவ்வாறு சிசு வெளியே கைவிடப்பட்டிருந்தது எனவும் குழந்தையின் உடல் நலத்திற்கு ஆபத்தில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சிசுவின் தாயை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## ரொரண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை மற்றும் பனியுடனான கால நிலை காணப்படுவதுடன் சனிக்கிழமை காலை முடிவில் வெயிலுடனான காலநிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நாளில் அதிகபட்ச வெப்பநிலை 11°C வரை பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஞாயிற்றுக்கிழமை முழுவதும் வெயிலுடனும், அதிகபட்ச வெப்பநிலை 14°C வரை உயர வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், வாரத்தின் தொடக்கத்தில் மோசமான வானிலை மீண்டும் திரும்பும் சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்படுகின்றது.

மேலும், திங்கள் முதல் புதன் வரை மழை அல்லது பனித்துளிகள் வரக்கூடிய சூழ்நிலை நிலவுவதுடன் வெப்பநிலை மீண்டும் குறையலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.